[திரு. துரைமுருகன்] [2010 ஏப்ரல் 27

செய்து கொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் இருக்கும்போது திடீரென்று அதை கேன்சல் செய்துவிட்டு, டெண்டர் விடுகிறோம், அதாவது ஏலம் விடுகிறோம் என்று நாங்கள் சொல்ல முடியாது. மூன்றாவது, ஒரு கம்பெனி அல்ல, Madras Cements, India Cements, Ultra Tech Cements, Grasim Industries, A.C.C., Chettinad Cements, Ash Tech Private Limited, A.R.K. Company. இவ்வளவு சிமெண்ட் கம்பெனிக்காரர்கள் இதனை வாங்குகிறார்கள். யாருக்கும் தனிப்பட்ட வகையிலே கொடுக்கவில்லை. பிறகு அந்த Association–லே இருக்கிறார்களே, நான் முன்னாலே சொன்னேனே, ஒரு Association–ஐ அவர்கள் form பண்ணியிருக்கிறார்கள், Pressurised Dense Fly Ash Collection System என்று. அந்த Association–லே யார், யார் இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்கிறோமே தவிர. தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கவில்லை. எனவே, இதை இலவசமாகவே கொடுங்கள் என்று சொன்னபோதுகூட, நாம் ஒரு டன்னுக்கு 60 ரூபாய் வாங்குகிறோம், அப்போதுகூட கட்டணம் என்று வாங்கவில்லை. ஏன் என்றால், மத்திய அரசினுடைய ஆணை அப்படி இருக்கிறது. ஆகையினால்தான், service charge என்று வாங்கினோம். ஆகையினால், எல்லாவற்றையும் ஒரே நாளில் தூக்கி போட்டுவிட்டு செய்யமுடியாது. ஆனால், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துகள், அதிலே இருக்கக்கூடிய பொருட்களை உணர்ந்து, மத்திய அரசாங்கத்தோடு பேச முடியுமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, தேவை என்றால் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) தூத்துக்குடி மாவட்டம், சூறாவளியால் கடற்கரைப் பகுதிகளில் நிறுத்தப்பட்ட படகுகளின் சேதத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தூத்துக்குடி மாவட்டத்தில் 7–4–2010 அன்று இரவு வீசிய சூறாவளிக் காற்றின் காரணமாக, கடற்கரைப் பகுதியில் கட்டப்பட்டிருந்த ரூபாய் 10 கோடி மதிப்புள்ள படகுகள் சேதமடைந்தது குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. தி. வேல்முருகன், டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. அ. தமிழரசு, திரு. இல. வேலுசாமி, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. வே. மாரிமுத்து,

2010 ஏப்ரல் 27] [பேரவைத் தலைவர்]

திரு. ப. டில்லி பாபு, திரு. ஞா. ஜாண் ஜோசப், திருமதி ரா. லீமா றோஸ், திருமதி ஜி. லதா ஆகியோர் விதிகள் 55 மற்றும் 56—ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மிகச் சுருக்கமாக மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 7—4—2010 அன்று தூத்துக்குடி மாவட்டத்தில் வீசிய சூறைக் காற்றால் அங்கே கடற்கரையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் எல்லாம் மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகி, சேதமடைந்திருக்கின்றன.

இது மீன்பிடியினுடைய தடைக் காலம், மீன்களுக்கான கர்ப்பக் காலம் என்று சொல்லி இரண்டு மாதக் காலம் மீன்பிடித் தொழிலுக்குத் தடை விதிக்கிற காலத்திலே வருமானமின்றி மீனவர்கள் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிற நேரத்தில், இதுபோன்ற துயரச் சம்பவம் நடைபெற்று இருக்கிறது. சூறாவளி வருகிற எச்சரிக்கையாக அரசு சார்பிலே கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? கருவிகள் அமைத்து இனிமேல் இதுபோன்ற விபத்துகள் நடக்காமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—00

பாதிக்கப்பட்ட மீனவர்களுடைய பட்டியலைத் தயார் செய்து மீனவர்களுக்குப் படகுகளை சரிசெய்வதற்கான நிதியுதவி வழங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்வதோடு, மீன்பிடித் தடைக் காலமாக இருக்கிறபோது மீன்பிடிக்காகக் கொடுக்கிற அரசு உதவித் தொகை ரூ.500 என்பது மிகக் குறைவாக இருக்கிறது. கருணை வள்ளலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிற இந்த நேரத்தில், ஒரு மாதத்திற்கு 500 ரூபாயை வைத்து எப்படி மீனவன் குடும்பத்தை ஓட்டமுடியும் என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து, வருகிற பட்ஜெட் அறிவிப்பிலே மீன்பிடித் தடைக் காலத்திலே, மாதம் ரூ.500 கொடுக்கிற அந்த உதவித்

தொகையைக்கூட, 3,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு பரிசீலனை செய்யவேண்டுமென்று வலியுறுத்தி, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய இழப்பீட்டை, நட்டத்தை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சீரழிந்த படகுகளை முழுமையாகச் சீர்படுத்தித் தரவேண்டுமென்று அரசை காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும் தூத்துக்குடி மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற அண்ணன் திரு. வசந்தகுமார் அவர்கள் சார்பிலேயும், திருமதி ராணி வெங்கடேசன் அவர்கள் சார்பிலேயும் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் 8 ஆம் தேதி, தூத்துக்குடியில் 100 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய சூறைக்காற்றுடன்கூடிய புயல் 300 படகுகளை நொறுக்கியுள்ளது. கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் சேதமென்று தினத்தந்தி உள்ளிட்ட அனைத்து தமிழ்ப் பத்திரிகைகளும், ஆங்கிலப் பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 300 படகுகளுக்குமேல் சேதமடைந்து, அவற்றில் பல படகுகள் புயலினுடைய வேகத்தில் ஒன்றுக்கொன்று மோதி கவிழ்ந்து முழுவதுமாகச் சேதமடைந்துள்ளன. தினமும் கடலில் மிதந்து மீன்பிடிக்கின்ற அந்த மீனவச் சகோதரர்கள் கண்ணீர்க் கடலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் இலங்கை இராணுவம் வலைகளை அறுத்து, படகுகளை அடித்து நொறுக்கி, துப்பாக்கியால் சுட்டுக்கொல்வது வாடிக்கையாக இருந்து வருகிறது. ஒரு பக்கம் இயற்கையும் அவர்களை வஞ்சித்து வருகிறது. ஒரு பக்கம் நம்முடைய கடலெல்லை தெரியாமல் அவர்கள் தடுமாறுகின்றபோது, இந்திய அரசினுடைய இராணுவத்தின் அச்சுறுத்தலுக்கும், மிரட்டலுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். ஆக, தொடர்ந்து அந்த மீனவர் சமூகம் பல்வேறு பாதிப்புகளுக்கும், இயற்கை இடர்ப்பாடுகளுக்கும் ஆளாகியிருக்கிறது. மிகப் பெரிய துயரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிற அந்த தூத்துக்குடி மீனவர் குடும்பங்களுக்கு நம்முடைய அரசு, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பாதிப்புக்குள்ளான படகுகளையும், சேதத்தையும் கணக்கில் எடுத்து

2010 ஏப்ரல் 27] [திரு. தி. வேல்முருகன்]

நிவாரணம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். அங்கே சூறைக்காற்று வீசியதனால் விவசாய மக்களுடைய வாழை மரங்களெல்லாம் மிகப் பெரிய சேதத்திற்கு உள்ளாகி அதுவும் அவர்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இந்தச் சூறைக்காற்று வீசியபோது, திருநெல்வேலி, தூத்துக்குடி, கடலூர், மதுரை போன்ற பல இடங்களில் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மதுரையிலே மேலூர் அருகிலே, அழகம்மாள் என்கிற 36 வயது பெண் இறந்திருக்கிறார். ஆக, இதுபோன்ற இயற்கை இடர்பாடுகள் வருகிறபோது நாம் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கடிதமாகத் தந்தால், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அடுத்த 24 மணி நேரத்தில் இறந்த குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய், இரண்டு இலட்சம் ரூபாய் என்றெல்லாம் நிதி அளித்திருக்கிறார்கள்.

என்னுடைய கடலூர் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பாக சூறைக்காற்று வீசியபோது ராமாபுரம் ஆதி திராவிடக் காலனியைச் சேர்ந்த இரண்டு பச்சிளங் குழந்தைகள், பள்ளியில் படிக்கின்ற இரண்டு ஆதி திராவிடர் சிறுமிகள் மணல் சரிந்து இறந்திருக்கிறார்கள். இரண்டு குழந்தைகளுக்கும் தந்தை இல்லை. அந்தக் குடும்பம் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறது. அதனால், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரோடு நம்முடைய அரசு தொடர்புகொண்டு, அந்த விவரங்களைப் பெற்று உடனடியாக அந்தக் குடும்பத்திற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

தஞ்சையிலும் கோடை மழை ஏற்பட்டு அங்கேயும் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய பண்ருட்டி, நெய்வேலி, குறிஞ்சிப்பாடி, நெல்லிக்குப்பம் பகுதிகளிலே வாழை விவசாயம் அதிகம். அங்கும் வாழை முற்றிலுமாகச் சரிந்து, வாழை விவசாயம் செய்தவர்கள், மிகப் பெரிய நட்டத்திற்கு ஆளாகி பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். ஆதலால், இதுபோன்ற இயற்கைச் சீற்றங்களால் ஏற்படுகின்ற பிரச்சினைகளை நாங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரும்போதெல்லாம், எங்களுக்கு நிவாரணம் அளித்து ஆதரவு அளித்திருக்கிறார்கள். அதன்

[திரு. தி. வேல்முருகன்] [2010 ஏப்ரல் 27

அடிப்படையில், தொடர்ந்து இதற்கும் நிவாரணம் அளிக்கவேண்டும். கண்ணீரில் வாழுகின்ற அந்த மீனவர் சகோதரர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் படகுகளைச் சீர்செய்வதற்கான தொகையாக ரூபாய் 10 கோடி கேட்டிருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலனை செய்து வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக அறிவிப்புக் கொடுத்தவர்கள் அவையில் இல்லை. மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி கடலோரப் பகுதியில் கடந்த 7–4–2010 அன்று இரவு சுமார் 9–30 மணியிலிருந்து சூறாவளிக் காற்று வீசத் தொடங்கியிருக்கிறது. அது படிப்படியாக அதிகரித்து 11 மணி வரை மழைத் தூறலுடன் காற்று வீசியிருக்கிறது. 45 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என புயல் அறிவிப்பு சுமார் 10 மணி அளவில் பெறப்பட்டது. இப்புயல் அறிவிப்பு அன்றைய தினமே அனைத்து மீனவக் கிராமங்களுக்கும் தொலைபேசிமூலம் தெரிவிக்கப்பட்டது.

அன்றைய இரவு இனிகோ நகர், திரேஸ்புரம், ரோஜ் நகர், தாளமுத்து நகர், விவேகானந்தா நகர், வெள்ளப்பட்டி, தருவைக்குளம் மற்றும் முள்வேலி பகுதிகளிலிருந்து மீன்பிடிக் கலன்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக மீன்வளத் துறை உதவி இயக்குநருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் மற்றும் தூத்துக்குடி மண்டல மீன்வளத் துறையினுடைய இணை இயக்குநர் ஆகியோரின் அறிவுரைப்படி மீன்வளத் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் 8–4–2010 அன்று தல ஆய்வு செய்து சேதார மதிப்பீடு செய்துள்ளனர். உயிர்ச் சேதம் எதுவும் இல்லை. கடலில் மீன் பிடிப்பில் ஈடுபட்டிருந்த மீன்பிடிக் கலன்களுக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை.

2010 ஏப்ரல் 27] [திரு. கே.பி.பி. சாமி]

தூத்துக்குடியிலிருந்து வட பகுதியில் 15 கிலோ மீட்டர் தூரமுள்ள தருவைக்குளம் வரையிலும், தூத்துக்குடியின் தென் பகுதியில் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள முள்வேலி பகுதி வரை பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. சேதமடைந்த மீன்பிடிக் கலன்கள் அனைத்தும் ஒன்றோடொன்று மோதியதால், கலன்களில் இரண்டு பக்கப் பலகைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. நங்கூரம் இடப்பட்ட கலன்கள், காற்றின் வேகத்தினால் நங்கூரம் இழுத்து வரப்பட்டு, கலன்கள் கரை ஒதுங்கியதால், அட்டி அணியன் அதாவது படகினுடைய முன் பகுதி மற்றும் பின் பகுதிகளில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. 7–4–2010 அன்று கடல் நீர் இறக்கம், low tide அதாவது வற்றும் நேரமாக இருந்ததனால், தருவைக்குளத்தில் நங்கூரம் இடப்பட்டு, விசைப் படகுகள் கரை ஒதுங்கியதால், படகுகளின் அடிப்பகுதிகள் மற்றும் propellers சேதம் அடைந்துள்ளன. தருவைக்குளம் பகுதியில் கரையோரத்தில் சிங்கிரால் கூண்டுகளில் வளர்க்கப்பட்டிருந்த சிங்கிரால்—lobster இறப்பு ஏற்பட்டுள்ளது. அந்த இழப்பினுடைய விவரங்கள் — திரேஸ்புரத்தில் 130 படகுகள், சுமார் 25 இலட்சம் ரூபாய் சேதார மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல சிலுவைப்பட்டி/தாளமுத்து நகரில் 28 படகுகள், 6 இலட்சம் ரூபாய் இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, விவேகானந்தர் நகரில் 55 படகுகள், 7 இலட்ச ரூபாய் இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, புது கடற்கரை 5 படகுகள் 0.30 இலட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முள்வேலி கிராமத்தில் 9 படகுகள், 0.30 இலட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, வெள்ளப்பட்டி 12 படகுகள், 3 இலட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. தருவைக்குளம் 74 படகுகள், 9 இலட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, தருவைக்குளம் சிங்கிரால் கூண்டுகளில் இழப்பு 26, அதில் 1.30 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. மொத்தம் 339 படகுகளுக்கு மீன் வளத் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் மூலமாக 51.90 இலட்சம் விசைப் படகுகளுக்குச் சேதார மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் சேதாரங்கள் தொடர்பாக தல ஆய்வின் அடிப்படையிலும் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பெறப்படுகின்ற கோரிக்கையின் அடிப்படையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கை அரசின் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.